RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1344

OPEN ACCESS

# சங்ககால மக்களின் தொழில்நிலைக் கோட்பாடுகள்

**மே. க. வசந்தி** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி- 620018, தமிழ்நாடு, இந்தியா

# The Occupational Principles of the People of the Sangam Age

**M. K. Vasanthi** [a, *]

[a] Department of Tamil, Cauvery College for Women (Autonomous), Tiruchirappalli-620018, Tamil Nadu, India

* Corresponding Author:
vasanthy.tamil@cauverycollege.ac.in

Received: 20-06-2022
Revised: 19-08-2022
Accepted: 30-08-2022
Published: 28-11-2022

Check for updates

**ABSTRACT**

Tamil is a language with an ancient literary tradition. Literature is a time mirror that captures the lives of people. In this way, the people who lived during the Sangam period took up various occupations to improve their standard of living. Food and water are essential to human life. Agriculture is the basis of food. The agriculture industry and the equipment (implements) related to it are explained. Clothing is essential for men. The textile industry, which produces garments, is explained. It is also explained by the carpentry industry, which produces the materials necessary for human life. Ornaments are used by man to beautify himself. This article examines the gold industry, the building industry, and the fishing industry through the Sangam literature. The significance of the weaving industry, the techniques used in weaving garments, and the barter system are examined and explained through the Sangam literature. The specialties of carpentry, iron, gold, and building industries and the methods of production of goods have been examined. It is established in the Sangam literary evidence that the people of the Sangam age developed their occupations in the best possible way by doing various occupations such as fishing, salt cultivation, etc., for their needs, for economic development, and for the betterment of life.

**Keywords:** Sangam literature, Occupational Principles, Occupation, Sangam Age

## முன்னுரை

உலக மொழிகளில் மிகவும் பழமையான மொழி, செம்மொழியாக விளங்குவது தமிழ் மொழியாகும். அம்மொழியானது தொன்மையான இலக்கிய, இலக்கண வளங்களை உடையது. செவ்வியல் இலக்கியமாக திகழ்வது சங்க இலக்கியமாகும். அவ்வாறு விளங்கும் சங்கஇலக்கியத்தில் பண்டைய தமிழர் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்ததுவதற்காக பல்வேறு தொழில்களை மேற்கொண்டு சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்தனர். சங்ககால மக்கள் தாங்கள் வாழும் நிலத்திற்கு ஏற்பவும் சூழ்நிலைக்கு ஏற்பவும் தங்கள் திறமைக்கு தகுந்தத் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்தனர் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு கல்வியானது மிகவும் முக்கியமான ஒரு கூறாக விளங்குகிறது. கவ்வி நிலை உயருமானால் அதன் பயனாகப் பல்வேறு தொழில்களும் திருத்தம் பெற்று வளர்ச்சியடைவது எளிதாகும். இதனை உணர்ந்த சங்ககால மக்கள் கல்வியால் தன்னுடைய அறிவை விரிவுபடுத்தி தொழிலை மேற்கொண்டுள்ளனர். அவற்றில் மனித உயிர் வாழ்வதற்கு அடிப்படையாக அமைவது உணவு. உணவினை உற்பத்தி செய்யும் உழவுத் தொழில், மனிதனின் தன்மானத்தைக் காப்பது ஆகும். ஆடைஉற்பத்தி செய்யும் நெசவுத் தொழில், ஒரு நிலத்தில் வாழும் மக்கள் தங்களடைய பொருளை

மற்ற நிலத்தில் வாழும் மக்களுக்கு கொடுத்து தங்களுக்குத் தேவையான பொருள்களைப் பெறுகின்ற பண்டமாற்று முறை மேலும் மனிதவாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற குடிசைத்தொழில்,தச்சு, மீன்பிடி, பொற்கொல்லர் போன்ற தொழில்களில் சிறந்துவிளங்கினர் என்பதை சங்கஇலக்கியத்தின் வழி விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## உழவுத் தொழில்

உயிரினங்கள் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாதது உணவாகும். இந்த உணவினை உற்பத்தி செய்வதற்கு நிலமும் நீரும் அடிப்படையானதாக இருந்தால் தான் இவ்வுணவினை உற்பத்தி செய்ய முடியும். நிலத்தை நன்றாக உழுது புழுதியாக்கி அதனை நன்கு பண்படுத்திய பின்பு அதற்கு நீர்ப்பாய்ச்சி நெல், தினை, வரகு, சாமை முதவியவற்றை விளைவிக்கும் பயிர்த் தொழிலை மேற்கொள்வர்.

இத்தொழிலை செய்யும் மக்களை உழவர் என அழைக்கப்படுவர் “உழத்தல்” ன்பது நிலத்தை உழும் உண்மையான முயற்சியைக் குறிக்கும் சொல்லாகும். மழை, பனி, வெயில் என்னும் பருவகால வேறுபாடுகளுள் ஊழவுக்கு ஏற்படும் எந்தவிதமான தொல்லைகளையும் பொருட்படுத்தாமல், நெற்றி வேர்வை நிலத்தில் விழ இடைவிடாது உழைக்கும் முயற்சி இப்பயிர்த் தொழிலுக்கு தேவைப்படுவதால் இத்தொழிலை “உழவு” என்ற சொல்லால் பண்டைய தமிழர் வழங்கினர். உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத எல்லாத் தொழில்களிலும் இவ்வுழவுத் தொழிலே தலைச் சிறந்து விளங்குகின்ற காரணத்தினால் தான்.

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின் செல்பவர்”

என்ற திருக்குறளின் வழியாக உழவுத் தொழிலில் சிறப்பினைத் எடுத்துரைக்கின்றார் (Parimelalhagar, 2002). மேலும் சங்க காலத் தமிழர் எல்லாத் தொழிலினும் இவ்வுழவுத் தொழிலையே தலைமை சிறப்பு வாய்ந்த தொழிலாகக் கருதினர். உலகில் உள்ள மக்கள் பல்வேறு தொழில் செய்து தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைச் சம்பாதித்தாலும் தங்களுடைய பசியினைப் போக்குவதற்கு உணவினைப் பெறுதல் வேண்டி உழவர்களின் கையினை எதிர்பார்த்து காத்து நிற்பர் அதனால் தான் உழவுத் தொழிலானது தலைமை சான்றத் தொழிலாகக் கருதப்படுகிறது மற்ற தொழில்கள் செய்பவர்கள் எல்லோரும் தன்னுடைய தொழில் நலனுக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் மற்றவர்களைச் சார்ந்து அவர்களின் ஆதரவு பெற்றிருக்க வேண்டும் ஆனால் உழவர்களுக்கு அவ்வாறு இல்லை. அதே போன்ற பொருள் இல்லை என்று தன்னிடம் வருபவர்களுக்கு உணவு வழங்கும் வண்மையும் உழவர்களுக்கு இயல்பாக அமைந்த பண்புகளாகும்.

சங்க இலக்கியத்தில் உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் ஏர் (கலப்பை) என்னும் உழவுக் கருவிப் பற்றியச் செய்தி இதில் இடம் பெற்றுள்ளது. அழகு என்னும் பொருளையும், உணர்த்தும் வேளாண்வினைபொருள் பெருக்கத்திற்கு காரணமாய் இருப்பதாலும் நிலத்தைப் பண்படுத்த உழவுவதாலும் கலப்பை ஏர் என்று அழைக்கப்படுகிறது. கீழுள்ள மண்ணை மேலேயும், மேலுள்ள மண்ணை கீழேயும் பக்குவப்படுத்துவதற்கு உழவர்கள் கலப்பையைப் பயன்படுத்தினர் என்பதனை,

“சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை”

என்ற திருக்குறள் வழியாக திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார் (Parimelalhagar, 2002). மேலும் உழவுத் தொழில் செய்யும் மக்களை பாதுகாக்க வேண்டும் என்று புறநானூறு கூறுகின்றது. ஏரைப் பாதுகாக்கும் உழவர்களுக்கு ஒரு குறையும் உண்டாகாமல் அவர்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்களைப் பாதுகாத்து உழவுத் தொழிலை வளர்த்து உணவுப் பொருளைப் பெருக்குவதன் மூலம் ஏனைய குடிமக்களையும் காப்பாற்ற வேண்டும். இவ்வாறு செய்தால் உன்னுடைய பகைவர் அனைவரும் உன்னைப் பணிவார்கள் என்பதை

"பொருமடை தருஉம் கொற்றமும் உழுபடை

ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே"

என்னும் புறநானூற்றுப் பாடலில் வெள்ளைக்குடி நாகனார் கூறியுள்ளார் (Avvai Duraisamy pillai, 2010). மேலும் சங்க காலத்தில் வாழ்ந்த உழவர் நிலத்தை கொண்டு காணியளராய் விளங்கியமையால் எப்போது பார்த்தாலும் தம்முடைய நிலத்தினை பண்படுத்தும் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். ஒரு பலம் நிறையுள்ள மண்ணானது கால்பலம் நிறையுள்ளதாகும்படி நிலத்தினை ஆழ உழுது புழுதியாக்கினால் ஒரு கைபிடி எருகுகூடு நிலத்திற்கு இடவேண்டாம் உணவுப் பொருள்கள் நிறைய விளையும் என்பதை பண்டைய தமிழர்கள் கண்டுணர்ந்தனர்.

விடியற்காலை பொழுதில் உழவர்கள் ஏர்களைக் கொண்டு நிலம் பிளவுப்படும் படி மண் பிறழும் படி உழுதனர். உழவர்கள் உழவு உழும் பொழுது ஓசையை எழுப்பிக் கொண்டு உழவுத் தொழிலை மேற்கொண்டுள்ளனர் என்பதனை,

"நெடுநல் அடைச்சிய கழனி எர் புகுத்து

குடுமிக் கட்டிய படைப்பையொடு மிளிர

அரிகால் போழந்து தெரி பகட்டு உழவர்"

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகளில் கூறியுள்ளார் (Venkatasami nattar, 2008). இன்றைய சூழுலில் உழவுத் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் நவீன கருவிகள் சங்க காலத்தில் இல்லை. சங்ககால மக்கள் உழவுத் தொழிலுக்கு ஏர் கலப்பை, காளை மாடுகள் இவற்றைக் கொண்டு உழவுத் தொழிலை மேற்கொண்டனர்.

புன்செய் நிலமான குறிஞ்சி நிலப்பகுதியில் மட்டுமே வளரும் தகவமைப்பு கொண்டு இத்தினையை உயர்ந்த பொருளாகக் கருதினர் என்பதனை,

"புனவன் துஉமைப் பொன்போல் சிறுதினை

கோழி குறைந்து உண்டு குழை கருவி"

என்ற குறுந்தொகைப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன (Swaminatha Iyer, 2009). கொல்லிமலையில் வாழும் பழங்குடி மக்கள் இன்றும் வீட்டினைச் சுற்றியுள்ள பகுதிகளில் தினையைப் பயிரிடும் முறை வழக்கில் உள்ளது. இதனை,

"முருகு முரண் கொள்ளும் உருவக் கண்ணியை எரிதின் கொல்லை இறைஞ்சிய ஞனல்

எவ்வம் கூரிய வைகலும் வருவோய்"

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன (Venkatasami nattar, 2008). மேலும் பழந்தமிழர் உழவுத் தொழிலில் சிறந்திருந்தமைக்கும் நிலம் பற்றிய நுட்பங்களை எல்லாம் அறிந்திருந்த அவர்தம் கூர்ந்த அறிவே காரணமாகும். பழந்தமிழர் சுற்றுச் சூழல் பாதுகாப்புக் கருதி மரங்களின் பசிய பூந்தாதுகளை நிலங்களில் எருவாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை

"பைந்தாது எருவின் வைகிலுயில் மடியும்"

என்றும் நற்றினைப் பாடல் வரி தெளிவுபடுத்துகிறது (Narayanasamy, 1952). தாதுக்கள் நுண்ணியவை ஆதலால் அவை உடனடியாக எருவாக மாற்றப்பட்டுவிடுகின்றது. அதனால் தான் பழந்தமிழர்கள் இலை, தழைகளை தங்களுடைய உழவுத்தொழிலுக்கு எருவாகப் பயன்படுத்தினர். எந்தவிதமான நோய்களும் இல்லாமல் நீண்டு ஆயுளுடன் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர்.

"புன்புல மயக்கத்து விளைந்தன தினையே"

என்றும் ஐங்குறுநூற்றுப் பாடல் வரியானது பண்படுத்தப் பட்ட நிலத்தில் பயிரிடும் தினை நன்றாக விளைந்தது என்று குறிப்பிடுகின்றது (Singaravadivelan, 2005). தினை என்பது புன்செய் நிலம் பயிர்

அதாவது மேட்டு நிலப்பயிர் என்பது தெளிவு. துனைப்பயிர் அறுவடை செய்த பின்னர் அந்நிலத்தில் மாற்றுப் பயிராக அவரையைப் பயிரிட்டனர் என்பதை,

"சிறுதினை கொய்த இருவி வெண்கால்

காய்ந்த அவரை"

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் வரியானது உணர்த்துகின்றது (Singaravadivelan, 2005). நிலத்தை நன்கு

"உழுது பக்குவப்படுத்தி அதற்கு இயற்கை உரமாக இலைகளையும், தழைகளையும் பயன்படுத்தி உழவுத் தொழிலைச் சிறப்பாக மேற்கொண்டு வாழ்ந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது. நெசவுத் தொழில் மக்களுக்கு உணவினை அடுத்து இன்றியமையாது வேண்டுனவற்றுள் உடையும் ஒன்றாகும். விலங்குகளைப் போலத் திரியாமல் தன்னுடைய உடலை மறைக்கும் உடையை உடுத்திக் கொண்டு மானம்துடன் வாழும் முறை மக்கள்" வாழ்க்கையின் சிறப்பியல்பாகும். நாகரீகம் வளராத மிகப் பழங்காலத்தில் மக்கள் தன்னுடைய உடலை மக்கள் மறைக்க

உடையாக இலை, தழையினையும் மான், புலி முதலியவற்றின் தோலினையும்உடுத்தி வந்தனர். பின்னர் தன்னுடைய நுண்ணயறிவின் திறத்தால் பருத்தி முதலிய பயிர்களை பயிரிட்டு அதன் பஞ்சினை நூலாக நூற்று ஆடை செய்து உடுத்திக் கொண்ட செயல் நாகரிகத்தின் தனிச் சிறப்பாகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் பழந்தமிழர் இந்நெசவுத் தொழிலினைக் கண்டுணர்ந்து இத்தொழிலின் நுண்ணிய தேர்ச்சி பெற்று விளங்கினர் என்பதை சங்க இலக்கியங்கள் விளக்குகின்றன. பெண்கள் பருத்திப் பஞ்சினைப் பிரித்து அதனை முறைப்படுத்தி நுண்ணிய நூலாக நூற்கும் தொழிலில் கைத்திறம் பெற்று விளங்கினர் அவர்கள் நூற்று இழைத்துத் தந்த நூலைத் தறியில் நெய்து ஆடையாகக் கொடுக்கும் கடமை ஆண்களுக்குரிய தொழிலாக அமைந்தது. பருத்தி நூலாலும் பட்டு நூலாலும் எலி மயிராலும் நுண்ணிய ஆடைகள் நெய்பவர்கள் தமிழ்நாட்டுப் பேரூர்களில் தங்கி தங்களுடைய தொழில் திறத்தைப் பெருக்கினர். இவ்வாறு நெசவுத் தெழில் திறத்தைப் பெருக்கினர். இவ்வாறு நெசவுத் தொழிலைச் செய்தவர் காருகர் என்ற பெயரால் அக்காலத்தில் அழைக்கப்பட்டள்ளனர். தறியில் நெய்து அறுக்கப்பட்டமையால் அறுவை என்ற பெயர் உடைக்கு உண்டாயிற்று.

நெசவுத் தொழில் கருவிகளுள் வில்லும் ஒன்றாக இருந்து அதன் பஞ்சையும் கொட்டையும் தனியே பிரிந்தெடுக்க வில் என்ற கருவியைப் பயன்படுத்தினர் என்பதை,

"வில்லெறி பஞ்சியின் வெண் மழை கவழும்" (Venkatasami nattar, 2008)

"அழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி

எஃகுறு பஞ்சிற் றாகி"

என்ற நற்றிணைப் பாடலும் விளக்குகிறது (Narayanasamy, 1952). இதில் எஃகுறு என்ற கருவியால் பஞ்சினை அடித்தனர் என்பதை அறியமுடிகிறது. நெசவுத் தொழிலுக்காக பஞ்சினைப் பருத்தி, இலவமரம், கோங்கு மரம் முதலியவற்றிலிருந்து சேகரித்தனர் இவ்வாறு சங்க கால மக்கள் நெசவுத் தொழிவுக்குத் தேவையான பொருள்களை சேகரித்து அத்தொழிலை சிறப்புடன் செயல்படுத்தி வந்தனர் என்பதை சங்க இலக்கியங்களின் மூலம் தெளிவாகிறது.

## பண்டமாற்று முறை

சங்க கால மக்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையாக உள்ள பொருள்களைக் கொடுத்து இல்லாதப் பொருளை மற்றவர்களிடம் இருந்து பெறுதல் பண்ட மாற்று முறை என வழங்கப்படும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்றும் நான்கு நிலங்களில் வாழ்ந்த மக்கள் தத்தம் நிலங்களில் உள்ள பொருள்களைக் கொண்டு சென்று மற்ற நிலங்களில் உள்ள உணவு முதலியவற்றை

பண்டமாற்று முறையில் பெற்று வந்தமையை சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. இப்பண்ட மாற்று முறை வாணிகம் என ஒரு தனி தொழிலாக வளர்ச்சிப் பெற்றுள்ளது.

சங்க காலத் தமிழர்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அரிசி, பருப்பு, உப்பு. பால், தயிர், மீன், இறைச்சி முதலிய பொருள்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று முறை மூலம் நிறைவேற்றிக் கொண்டனர். அதிக விலையுள்ள பொருள்களை மட்டுமே தேவை கருதி காசு கொடுத்து வாங்கியுள்ளனர். அன்றைய தமிழகத்தின் பண்டமாற்று முறையினை சங்க இலக்கியங்கள் தெளிவாகப் பதிவு செய்துள்ளன.

“பாலொடு வந்து கூழொடு பெயரும்

யாருடை இடைமகன்”

என்ற குறுந்தொகைப் பாடல் வரியானது ஓர் இடையன் பாலைக் கொடுத்து அதற்கு ஈடாகத் தானியத்தைப் பெற்றுக் கொண்டதை விளக்குகிறது (Swaminatha Iyer, 2009). மேலும், உமணர் மருத நிலத்தில் விளைந்த நெல்லுக்கு பண்டமாற்று முறையில் பெற்றுச் சென்றதை,

“நெல்லின் நேகர வெண்கல் உட்பெனச்

சேரி விலைமாறு கூறலின்”

என்ற அகநானூற்று பாடல் வரியானது பண்டமாற்று முறையினை காட்சிப்படுத்துகிறது (Venkatasami nattar, 2008). கொல்லிமலை மேல் வாழ்ந்த மக்கள் தம் சுற்றம் பசித்திருப்பதால் தம் வசமிருந்த யானைத் தந்தங்களை தானியத்திற்கு பண்டமாற்றுப் பொருளாகப் பெற்று சோறு சமைத்து உண்டனர் என்பதை,

“காந்தள் அம் சிலம்பின் சிறுகுடி பசித்தென

கடுங்கண் வேழத்தும் கோடுநொடுத்து உண்ணும்

வல்வில் ஓரி கொல்லிக் குடவரை”

என்ற குறுந்தொகைப் பாடல் வரிகளானது சங்க கால மக்களின் பண்டமாற்று முறையைத் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகின்றது (Swaminatha Iyer, 2009).

தமிழகம் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கியதால் கலங்கரை விளக்கங்கள் அமைக்கப்பட்டன. பண்டங்களை ஏற்ற இறக்கத் துறைமுகங்கள் அமைக்கப்பட்டன. சுங்கம் வசூலிக்கப்பட்டது. வாணிகத்தில் கிரேக்கர்கள் யவனர்கள் பெரும் பங்கு வகித்தனர்.

“யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்

பொன்செய் புனைகலந் தேந்தி நாளும்

ஒண்தொடி மகளிர் மருப்ப”

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் விளக்குகிறது (Avvai Duraisamy pillai, 2010). மேலும் அவர்களிடமிருந்து விளக்குகள், மது வகைகள் பெற்றுக் கொண்டு அவற்றிற்கு ஈடாக பருத்தியாடைகள் முத்துகள், வாசனைப் பொருட்களை தமிழர்கள் ஏற்றுமதி செய்தனர். கொற்கை, முசிறி, புகார் முதலிய துறைமுகங்கள் தமிழ்நாட்டில் சிறந்த ஏற்றுமதி இறக்குமதி அச்சுப்பிழை மற்றும் எழுத்துப்பிழைவணிகத் தலங்களாக திகழ்ந்தன என்பதைச் சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. தமிழ்நாட்டில் பிறநாட்டார் மனத்தைக் கவரும் பல பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன. அவற்றுள் முத்தும், பவளமும், ஆரமும், அகிலும் வெண்துகிலும், சங்கும், மிளகும் குறிப்பிடத்தக்கவையாகும். யவணர்கள் பொன்னைக் கொண்டு வந்து கொடுத்து மிளகைப் பெற்றுச் சென்றனர் என்பதை,

“யவனர் தந்த வினைமாண் நன்கலன்

பொன்னொடு வந்து கறியொடு பெயரும்”

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் யவணர்களுடன் தமிழர்கள் மேற்கொண்ட பண்டமாற்று முறைக்கு சான்று பகர்கின்றன. இவ்வாறு சங்ககாலத் தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கைத் தேவைக்காக ஒரு நிலத்தில் வாழும் மக்கள் மற்ற நிலங்களில் வாழும் மக்களோடு பண்டமாற்று முறையில் ஈடுபட்டிருந்தனர். மேலும், கடல் வழி வாணிபத்திலும் இப்பண்டமாற்று முறை இடம் பெற்றுள்ளது (Venkatasami nattar, 2008).

## மீன் பிடித் தொழில்

சங்க காலத்தில் மீன் பிடித் தொழில் சிறப்புற்றிருந்தது. பரதவரின் வாழ்க்கை முழுவதும் கடலோடு தொடர்புடையது. நெய்தல் நிலமக்களின் தொழில் மீன்பிடி தொழிலாகும். துங்கள் தொழிலுக்கு வலைகள், பறி, தூண்டில், எறியளி, மரக்கலம் ஆகிய கருவிகளைப் பயன்படுத்தியதை சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். வலைகள் சிறுசிறு கண்களை உடையது. நெடிய கயிற்றால் பிணைக்கப்பெற்றது. இவ்வலையினைக் கொண்டு சுறாமீன் மற்றும் இறால் மீன்களைப் பிடித்தனர்.

“கோட்சுறாக் கிழிந்த கொடுமுடி நெடுவலை”

என்ற அகநானூற்றுப் பாடல் வரியானது மீனவர்கள் கடலுக்குச் சென்று உறுதி வாய்ந்த வலையினை வீசி சுறா மீனை பிடிக்க முயன்றனர் (Venkatasami nattar, 2008). ஆனால் சின்ன சுறாமீன் வலையைக் கிழித்துவிடுகிறது என்று மீனவர்களின் வலையைப் பற்றி கூறுகின்றது. மீன்களை வாரி எடுக்கப் பயன்படும் கருவி பறி எனப்படும். மீன்பிடி கருவியாக பறி பயன்பட்டதை இலக்கியங்கள் சுட்டுகின்றது.

“பறிகொள் கொள்ளையர் மறுக”

என்ற அகநானூற்றுப் பாடல் வரியில் நெய்தல் நில மக்களான பரதவர் தங்கள் மீன் பிடித் தொழிலுக்கு பறி எனப்படும் (Venkatasami nattar, 2008). வலையைப் பயன்படுத்தினர் என்பதை விளக்குகிறது. மேலும் தூண்டிலானது மீன் பிடித்தொழிலுக்கு பயன்பட்டது என்பதை,

“பருவாய் வராஅள் பல்வரி இடும் போத்துக்

தூண்டில் வேட்டுவன் வாங்க வராது”

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் சுட்டிக் காட்டுகின்றன (Venkatasami nattar, 2008). பிளந்த வாயை உடைய ஆண் விரால் மீன் வளைவான தூண்டிலில் உள்ள இரையை விழுங்கி குளத்தில் உள்ள கொடிகளைக் கலைந்து மீன் பிடிப்பவன் இழுக்கவும் வராமல் குளத்தைக் கலக்கும் என்ற தலைவியின் கூற்று வழி மீன்பிடித் தூண்டில் பற்றிய செய்தியை அறியமுடிகிறது.

உப்பு விளைவித்தல் விற்றல் நெய்தல் நில மக்களுக்குரிய தொழில் இவர்கள் கடல்கரையிலும் கழிக்கரையிலும் உள்ள உவர் மண் நிலத்திலும் சிறுசிறு பாத்திகளை அமைத்து கடல் நீரினைப் பாய்ச்சி உப்பு விளைவிப்பர் விளைவிக்கப்பட்ட உப்பினை அருகில் உள்ள ஊர்களுக்கும் தொலைவில் உள்ள ஊர்களுக்கும் சென்று விற்பனை செய்வர். விற்பதற்குச் செல்ல வண்டிகளைப் பயன்படுத்தினர் என்பதை,

“கடுவெயிற் கொதித்த கல்வினை உப்பு

நெடுநெற ஒழுகை நிரை திசலப் பார்ப்போர்”

என்ற நற்றினைப் பாடல் வரியானது உப்பு விளைவித்ததும் அதனை விற்பனை செய்ய வண்டி பயன்படுத்தப்பட்டதும் தெளிவாகிறது (Narayanasamy, 1952).

## தோல் தொழில்

தோல் பதனிடுதல் நீண்ட நெடுங்காலமாக உலகோர் அறிந்திருந்த தொழில்நுட்பம். இறந்து போன விலங்குகளின் தோலின் பயனறிந்து பழந்தமிழர்கள் அவற்றைப் பதப்படுத்தி தமக்குத்

தேவையான பொருள்களைத் தயாரித்தனர். தோல் பதனிடுதலில் மரப்பட்டைகள் மரம், வேர், துவர்மண் ஆகியவை முற்காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டது. போர்த் தொழிலுக்குச் செல்லும் படை வீரர்கள் பகைவீரர்களின் தாக்குதலில் இருந்து தம்மைக் காத்துக்கொள்ள கேடயத்தைப் பயன்படுத்தினர். இது தோலால் ஆன கருவியாகும்.

"சிறுகண் யானை நெடுநா ஒண்மணி கழிப்பிணிக் கறைத்தோல் பொழிகளை உதைப்பு

தழங்கு குரல் முரசமொழி முழங்கம் யாமம்"

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகளில் சிறிய கண்ணினை உடைய யானையின் மணி ஓசையும் கேடயத்தில் பாயும் அம்பின் ஓசையும் வீரமுரசொலிக் கேட்கும் நடுசாமத்தில் தங்கியுள்ளோம் என்ற செய்தி விளக்கப்பட்டுள்ளது (Venkatasami Nattar, 2008).

## பொன் தொழில்

உலோகங்களில் உயர்ந்தது பொன். வேதகாலம் முதலே உலோகம் பொன். சங்க காலத்தில் ஆண்களும், பெண்களும் தங்கள் அழகினை மேலும் மெருகூட்ட அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய அணிகலன்களை அணிந்தனர். அணிகலன்களைச் செய்பவர்கள் பொற்கொல்லர் எனப்பட்டனர். இத்தொழிலுக்கு அவர்கள் அரம், ஊதுஉலை, கட்டளைக்கல் போன்றவற்றைப் பயன்படுத்தினர். பொன்னை வடிவமைக்க பொற் கொல்லர் ஊது உலையினைப் பயன்படுத்தினர் இவ்ஊதுஉலைப் பற்றி,

"ஊது உலைப் பெய்த தெண்பணி"

என்ற குறுந்தொகைப் பாடல் சுட்டுகிறது ஊது உலையில் சுடுமண் ஓட்டில் உம்மியினை வைத்து அதன் நடுவில் எரிந்த கரிசிரட்டையினை பரப்பி நெருப்பிட்டு தொன்னை தேவையான வடிவங்களில் உருவாக்க இவ்வுலைப் பயன்னட்டது (Swaminatha Iyer, 2009).

## இரும்புத் தொழில்

சங்க கால மக்கள் மற்ற தொழிலில் சிறப்புற்று விளங்கியது போன்றே இரும்புத் தொழிலிலும் சிறப்புற்றிருந்தனர். வரலாற்று அடிப்படையில் காலமானது கற்காலம், செம்புக்காலம், இரும்புக்காலம் என வகுக்கப்பட்டது. நம் மக்கள் இரும்புத் தொழிலில் நுட்பமான முறையில் செயல்பட்டு முன்னணியில் இருந்துள்ளனர்.

"ஏழு ஊர்ப் பொதுவினைக்கு ஓர் ஊர் யாத்த

ஊலை வாங்க மிதிகோல்"

என்ற குறுந்தொகைப் பாடல் வரி விளக்குகிறது (Swaminatha Iyer, 2009). ஏழு ஊரிலுள்ளாரின் கொல்லர் தொழில் தேவைகள் அனைத்தையும் ஓர் ஊரில் உள்ள கொல்லுலையில் செய்தால் அங்குள்ள மிதிதோல் தொடர்ந்து இயங்கியதை மேற்கண்ட பாடலடி விளக்குகிறது.

## தச்சுத் தொழில்

மரத்தினை அறுத்து வீடமைப்பதற்கும், வண்டி, தேர் முதலியன செய்தற்கும் வழி கண்ட பெருமை தச்சர் என்னும் தொழிலுக்கே உரியதாகும். மக்கள் சுமந்து செல்லுதற்குரிய பாரத்தை எளிதிலே உருட்டி இழுத்துச் செல்லுதற்கேற்ற சகடையை உமைத்து உதவிய திறம் தச்சுத் தொழிலின் நுணுக்கமாகும். தச்சர்கள் தங்கள் கையிலுள்ள உளி முதலிய கருவிகளைக் கொண்டு காட்டில் உள்ள நல்ல மரங்களைச் செதுக்கி மக்கள் பயன்படுத்துவதற்குரிய பொருள்களை உருவாக்கி வாழ்வு நடத்தினார்கள். இதனை,

"கூர் உளி குயின்ற கோடு மாய் எழுத்து"

என்ற அகநானூற்றுப் பாடல் வரியானது தச்சுத் தொழிலுக்குப் பயன்படும் கூர்மையான உளி பற்றிய செய்தியை விளக்குகிறது (Venkatasami nattar, 2008).

## கட்டிடத் தொழில்

மக்கள் வாழ்க்கைக்கு உணவு, உடை போன்று சிறப்பாக வேண்டப்படுவது இருப்பிடமாகும். மழை, பனி, வெயில் போன்றவற்றால் உண்டாகும் துன்பங்களை விலக்கி இன்பமாக வாழ்வதற்குரிய வழி வகையினை தருவது இருப்பிடமாகும். இவைப்போல் புல்லால் வேயப்பட்ட சிறுகுடில் முதலாக அண்ணாந்து பார்க்க இயலாதபடி உயர்ந்து தோன்றும் எழுநிலை மாடம் வரை பல திறப்பட்ட கட்டிடங்களையும் திறம்பட அமைக்கும் கட்டிடத் தொழிலில் சங்க காலத் தமிழ் மக்கள் சிறந்து விளங்கினார்கள். பத்துப்பாட்டு இலக்கியத்தில் ஒன்றாக விளங்கக் கூடிய நக்கீரனார் இயற்றிய நெடுநல்வாடையில் கட்டிடக் கலையின் சிறப்பினைக் கூறியுள்ளார். கட்டிட நூலினை நன்கு உணர்ந்த சிற்பிகள் நிலத்தினைக் கயிறிட்டு அளந்து பெரும்பெயர்மன்னர்க்கு ஏற்ப மாளிகையினை அமைத்து தொழில் திறத்தை விரிவாக விளக்குகின்றார். மலையை நடுவில் திறந்தாற் போன்ற உயர்ந்த கோபுர வாயில்களும், மக்கள் பருவநிலைக்கேற்ப இன்பம் நுகர்வதற்குரிய நிலாமுற்றம், வேனிற்பள்ளி, கூதிர் பள்ளி முதலியனவும் தமிழ்நாட்டு கலைஞர்களால் சிறப்பாக அமைக்கப்பட்டன. கட்டிடத் தொழிலுக்கு இன்றியமையாத தொழிலாளர் தச்சர், கொல்லர் முதலியவராவர். இவர் காடுடைய உதவி இன்றி கட்டிடங்கள் கட்டுடதல் இயலாத செயலாகும்.

## பல்வேறு தொழில்கள்

வெண்கலம், செம்பு, இரும்பு முதலிய உலோகங்களையும் திறம்பட மக்கள் பயன்படுத்துவதற்குரிய பல்வகைப் பொருள்களையும் படைகலன்களையும் செய்ய வல்ல வன்தொழிலாளர்கள் ஊர் தோறும் தங்கி தங்களுக்குரிய தொழில் வகைகளைப் பெருக்கி வந்தார்கள். வெண்கலத்தை உருக்கிப் பொருள்கள் முதலியன செய்பவர் கஞ்சகாரர் என வழங்கப்பட்டனர். செம்பினால் கலம் செய்வார் செம்பு கொட்டிகள் எனப்படுவர். இரும்பினைக் காய்ச்சி அடித்து வலிய தொழில் செய்வார் கொல்லர் என வழங்கப்பட்டனர். கண் கவரும் ஓவியங்களை எழுத வல்லவர் கண்ணுள் வினைஞர் எனக் குறிக்கப்பட்டனர். சுதையினாலே பதுமை முதலியன செய்து வாழ்பவர் மண்ணீட்டாளர் என வழங்கப்பெற்றனர். அருமைப் பாடுடைய வினைத்திறம் அமையப் பொன்னினால் பலவகை அணிகலங்களைச் செய்பவர் பொற்கொல்லர் எனப்படுவர். பொன்னிலே நல்ல மணிகளைப் பதிக்கும் இயல்பறிந்து அணிகலன் அமைக்கும் இரத்தினப் பணித் தட்டாளர்களும் தமிழ்நாட்டில் பெருக வாழ்ந்தனர். ஆடையினால் மெய்ப்பை (சட்டை) முதலியவற்றை அழகு பெறத் தைக்குந் தொழில் வல்லவர் துன்னகாரர் என வழங்கப் பெற்றனர். தோலினால் செருப்புத் தைத்தலும் கட்டில் முதலியன பின்னுதலும் ஆகிய தொழில்களைக் செய்தவர் தோலின் துன்னர் என்ற பெயரால் சங்க காலத்தில் அழைக்கப்பட்டனர்.

## முடிவுரை

மக்கள் தங்களுடைய வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தொழில் முக்கியக் காரணியாக விளங்குகின்றது. ஒவ்வொரு நிலத்தில் வாழும் மக்கள் தங்களின் நில அமைப்புக்கு ஏற்றவாறு தொழிலினை மேற்கொண்டுனர். மனிதன் உயிர் வாழ்வதற்கு அடிப்படையாக அமைவது உணவாகும். உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் உழவுத் தொழிலின் நுணுக்கத்தினையும் பருவ காலத்துக்கு ஏற்றவாறு சங்க கால மக்கள் பயிரிட்டு உணவுத் தேவையை நிறைவேற்றியுள்ளனர் என்பதை உணர முடிகிறது.

## References

Avvai Duraisamy Pillai, S. (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Narayanasamy Iyer, A. (1952) Natrinai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Singaravadivelan, Ara. (2005) Ainkurunuru Moolamum Uraiyum, Koviloor Madalayam, Koviloor, India.

Swaminatha Iyer, U.Ve. (2009) Kurunthogai Moolamum Uraiyum, U.V.SA., Library, Chennai, India.

Venkatasami nattar, N.M. (2008) Agananooru, Ramaiya Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License